# தேவனுக்கு மகிமையுண்டாவதாக! (11:25-36)

*ரோமருக்கு எழுதிய நிருபத்திற்கான நமது வரைகுறிப்பைப் பின்பற்றுவதில், நாம் "**நடைமுறை**" என்ற முதல் பகுதியின் முடிவை நெருங்கியிருக்கிறோம்: "விளக்கம்தரும்" பகுதி. (பக்கம் 24 ல் வரைகுறிப்பைக் காணவும்.) ரோமர் 11:25-36ல், பவுல் "யூதத்துவப் பிரச்சனை" என்று நாம் அழைத்துள்ள, தமது கலந்துரையாடலை நிறைவுசெய்தார் (வசனங்கள் 25-32). பின்பு அவர் தமது கர்த்தரைத் துதிப்பதில் மெய்மறந்தார் (வசனங்கள் 33-36). நமது பாடத்திற்கான தலைப்பு 36ம் வசனத்திலுள்ள பின்வரும் வார்த்தைகளின் அடிப்படையில் அமைந் துள்ளது: "அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக."*

*இந்த எடுத்துரைப்பின் பிரதான பிரிவுகள் நமது வேதபாட வசனப் பகுதியின் திறப்பு வார்த்தைகளினால் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன: "... நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்" (வசனம் 25அ).* NIV *வேதாகமத்தில்* "I do not want you to be ignorant" *என்றுள்ளது. பவுல் இரட்சிப்பைப் பற்றியும் தேவனை பற்றியும் நாம் அறியக்கூடிய சில சத்தியங்களைப் பற்றிப் பேசினார். மேலும் அவர் நாம் அறிய* முடியாத *சில விஷயங்களைப் பற்றியும் குறிப் பிட்டார்.*

## *இரட்சிப்பைப் பற்றி நாம் அறியக்கூடியது என்ன (11:25-32)*

***தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளார் (வசனங்கள் 25-27)***

*முதலாவது, நாம் தேவன் இஸ்ரவேலை இரட்சிப்பதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்தினார் என்று அறியமுடியும். நமது வேதபாட வசனப்பகுதி பின்வரு மாறு தொடங்குகிறது,*

> *மேலும், [புறஜாதி] சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான் களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென் றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (வசனங்கள் 25, 26அ).*

*“இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்? (11:25, 26அ)” என்ற பாடத்தில் குறிப்பிட்டபடி, “இரகசியம்” என்பது கடந்தகாலத்தில் அறியப் படாதிருந்ததும் இப்போது தேவனால் வெளிப்படுத்தப்பட்டதுமான விஷயத்தைக் குறிக்கிறது. நமது வேதபாட வசனத்தைப் பொறுத்தமட்டில், யூதர்களின் விசுவாசத்தைத் தூண்டுவதற்காகப் புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப் பட்டதைப் பயன்படுத்துவதற்கான தேவனுடைய திட்டமாக இந்த ஆச்சரிய மான “இரகசியத்தின்” (வெளிப்படுத்துதல்) ஒரு பகுதி இருந்தது:*

> *... [தேவனால் தள்ளிவிடப்பட்டதை விளைவித்த] ஒரு பகுதி கடின மனது என்பது புறஜாதியார் உள்ளே வரும் வரையில் [புறஜாதியார் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் வரையில்] [மாம்சப்பிரகாரமான] இஸ்ரவேலுக்கு நடைபெற் றிருந்தது; மற்றும் [இவ்வாறு] இஸ்ரவேலர் எல்லாரும் [புறஜாதி யார் ஏற்றுக்கொள்ளப்பட்டதினால் வைராக்கியத்திற்குத் தூண்டப்பட் டிருப்பதினால்] இரட்சிக்கப்படுவார்கள். ...*

*பவுல் அடிக்கடி செய்ததுபோல், அவர் தமது உறுதிப்பாட்டை வேதவசனங் களைக் கொண்டு நிலைப்படுத்தினார்: “ ‘மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன் படிக்கை என்றும் எழுதியிருக்கிறது’ ” (வசனங்கள் 26ஆ, 27). இந்த மேற்கோளானது பழைய ஏற்பாட்டு வேதவசனப்பகுதிகளின் கலவையாக உள்ளது. ஏசாயா 59:20, 21 இதன் அடிப்படைக் குறிப்பாக உள்ளது. அந்த வசனப்பதியில் ஏசாயா, இஸ்ரவேல் சீர்திருத்தப்படுவதை முன்னுரைத்தார். இந்த வார்த்தைகளைப் பவுல் யூதர்கள் தேவனிடத்தில் திரும்புவதற்கு வழிமுறைகளை அளிக்கும் இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தினார். ஏசாயா 27:9 லிருந்து ஒரு வரியும் இருக்கலாம், மற்றும் முடிவுப்பகுதியானது நமக்கு, எரேமியாவின் “ஒரு புதிய உடன்படிக்கை” பற்றிய வாக்குத்தத்தத்தை நினைவூட்டுகிறது. ரோமருக்கு எழுதிய நிருபத்திலுள்ள இவ்வசனப்பகுதியைப் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்:*

| *ரோமர் 11:26ஆ, 27* | *பழைய ஏற்பாடு* |
|---|---|
| *“ ‘மீட்கிறவர் சீயோனிலிருந்து [எருசலேமிலிருந்து] வந்து ...’ ’* | *“ ‘மீட்பர் சீயோனுக்கும் [எருசலேமுக்கும்], வருவார்.’ ” (ஏசாயா 59:20).* |
| *“ ‘அவபக்தியை யாக்கோபை [இஸ்ரவேலை]விட்டு, விலக்குவார்.’ ”* | *“ ‘யாக்கோபின் அக்கிரமம் நிக்கிரகம்பண்ணப்படும்’ ” (ஏசாயா 27:9அ).* |
| *“ ‘இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை.’ ”* | *“ ‘இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கை’ ” (ஏசாயா 59:21ஆ).* |
| *“ ‘நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது’ ”* | *“ ‘நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதி ருப்பேன்’ ” (எரேமியா 31:31-34).* |

பழைய ஏற்பாட்டு வசனக்குறிப்புகளுக்கும் பவுலின் மேற்கோளுக்குமிடையிலுள்ள மிகத் தெளிவான ஒரு வேறுபாடு பின்வருமாறு: ஏசாயா, "ஒரு மீட்பர் சீயோ*னுக்கு* வருவார்" என்று கூறியிருக்கையில், பவுல், "மீட்கிறவர் சீயோனி*லிருந்து* வந்து" என்று கூறினார். (ஏவுதலினால்) பவுல் ஏன் இந்த வார்த்தை அமைப்பை மாற்றினார் என்று நாம் நிச்சயமாகக் கூற இயலாது. ஒருவேளை அவர் புறஜாதியாருக்கு, அவர்களின் மீட்பர் *யூதராயிருப்பார்* என்பதைத் திரும்பவும் நினைவூட்டியிருக்கலாம். பவுல், "கர்த்தருடைய வசனம் [சுவிசேஷம்]" என்பது "எருசலேமில் *இருந்து*" புறப்படும் (ஏசாயா 2:3; காண்க லூக்கா 24:47; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தினுடைய செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கலாம்.

ரோமர் 11:25-27 வசனப்பகுதியானது காலத்தின் முடிவில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி பேசுகிறது என்று நினைப்பவர்கள், பவுலின் பழைய ஏற்பாட்டு மேற்கோள் இயேசுவின் *இரண்டாம்* வருகை பற்றியது என்று நம்புகின்றனர். அந்த விளக்கத்தைப் புறக்கணிப்பதற்குச் சில காரணங்கள் உள்ளன. (1) ஜான் R. W. ஸ்டாட் என்பவர் சுட்டிக்காண்பித்துள்ளபடி, "இது [வசனப்பகுதியானது], ஏசாயாவின் மூலவசனத்தில் கிறிஸ்துவின் *முதல்* வருகைக்கான குறிப்பாக இருந்தது."[1] (2) "அவபக்தியை யாக்கோபை [இஸ்ரவேலை]விட்டு விலக்குதல்" (மத்தேயு 15:24ஐக் காணவும்), "அவர்களின் பாவங்களை எடுத்துப் போடுதல்" - அதாவது, இழந்துபோனதை இரட்சித்தல் (காண்க - லூக்கா 19:10) என்பது கிறிஸ்துவின் *முதல்* வருகையினுடைய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. இயேசு *இரண்டாவது* முறை வரும்போது, அது பாவங்களை எடுத்துப்போடுவதற்கானதாக இராது, அது நியாயந்தீர்க்குதலுக்கானதாக இருக்கும் (காண்க மத்தேயு 25:31-33). (3) ரோமர் 11:26ஆ, 27ஐ, "ஒரு புதிய உடன்படிக்கை" பற்றிய எரேமியாவின் வாக்குத்தத்தத்திலிருந்து தனிமைப்படுத்துதல் என்பது கடினமானதாக இருக்கும், ஆனால் அந்தப் புதிய உடன்படிக்கையானது (இயேசுவின் புதிய ஏற்பாடானது) ஏற்கனவே நிலை நாட்டப்பட்டிருந்தது (காண்க எபிரெயர் 8:8-12). ஆகவே நான், ரோமர் 11:26ஆ, 27 வசனப்பகுதியானது இயேசுவின் *இரண்டாம்* வருகை பற்றியதல்ல, ஆனால் அவரது *முதல்* வருகை - அவர் "மாம்சத்தில் வந்தபோது" (யோவான் 1:14) நடந்தவை - பற்றியது என்று முடிவுசெய்கிறேன்.

மீட்கிறவர் (கிறிஸ்து) இஸ்ரவேலை இரட்சிக்க (அவர்களைத் தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கங்களிடத்தில் திரும்பக் கொண்டுவருவதற்கு) வருவார் என்று தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தனர் என்று காண்பித்தலே 26 மற்றும் 27ம் வசனங்களின் மேற்கோளினுடைய கருத்தாக இருந்தது. இது புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்பட்டதினால் யூதர்கள் வைராக்கியம் அடையும்படி அசைக்கப்பட்ட வகையில் நடைபெறும். தேவன் யூதர்களை இரட்சிக்க, இயேசுவை மையங்கொண்ட ஒரு திட்டத்தை கொண்டிருந்தார் (மற்றும் கொண்டிருக்கிறார்).

### யூதர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (வசனங்கள் 28, 29).

இரண்டாவதாக, இரட்சிப்பைப் பொறுத்தமட்டில், நாம் யூதர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று இன்னமும் தேவன் *விரும்புகிறார்* என்று அறிய

முடியும். 28, 29ம் வசனங்களில் பவுல், "சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் [யூதர்கள்] உங்கள் [புறஜாதியார்] நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளுதலைக்குறித்து அவர்கள் [யூதர்கள்] பிதாக்களினிமித்தம் அன்புகூரப் பட்டவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" என்று கூறினார். ஒரு கண்ணோக்கி லிருந்து யூதர்கள் "பகைஞராக" இருந்தனர்; ஆனால், இன்னொரு கண்ணோக்கில் அவர்கள், "அன்புகூரப்பட்டவர்களாக" இருந்தனர்.

மாம்சப்பிரகாரமான யூதர்கள் இன்னமும் "தேவனால் தெரிந்துகொள்ளப் பட்ட மக்களாக" இருக்கின்றனர் என்று நம்புகிறவர்கள், இவ்விரு வசனங்களும் அவர்களின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்றன என்று நம்புகின்றனர். இருப்பினும், மாம்சப்பிரகாரமான இஸ்ரவேலர்கள் இனியும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களினமாக இருப்பதில்லை என்று நாம் ஏற்கனவே நிலைநாட்டியிருக்கிறோம். ("தேவன் & இஸ்ரவேல் மக்கள்" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும்.) "இஸ்ரவேல் மக்களினத்திற்கான எந்த சிலாக்கியமும் மாற்றப்பட்டுள்ளது."[2] விஷயம் அப்படியிருந்தால், 28 மற்றும் 29ம் வசனங்களில் பவுல் கூறியிருந்தது என்ன? மனந்திரும்புதலுக்கான வாய்ப்பையும் தேவனிடம் திரும்புதலுக்கான வாய்ப்பையும் தேவன் யூதர்களுக்குத் தொடர்ந்து நீட்டித் திருந்தது ஏன் என்பதை அவர் [பவுல்] விளக்கினார் என்று நான் நம்புகிறேன்.

28ம் வசனம், "சுவிசேஷத்துக்குறித்து அவர்கள் ... பகைஞராயிருக்கிறார்கள்" என்ற தொடங்குகிறது. யூதத்தலைவர்களால் வழிநடத்தப்பட்ட யூதக்கும்பல் ஒன்று, இயேசுவைச் சிலுவையில் அறைந்திருந்தது. சபை நிலைநாட்டப்பட்ட பின்பு, பெரும்பான்மையான யூதர்கள், இயேசுவின் வரலாறு பிரசங்கிக்கப்படு வதை உக்கிரமாக எதிர்த்து நின்றனர் (எடுத்துக்காட்டாக, காண்க நடபடிகள் 17:5, 13). அவர்களில் சிலர் தங்கள் வழி வாய்க்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு சுவிசேஷ ஊழியரும் வாயடைக்கப்பட்டிருப்பார், மற்றும் எவரொருவரும் எக்காலத்திலும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வாய்ப்புப் பெறாதிருந்திருப்பர். "சுவிசேஷத்தின் நிலைப்பாட்டிலிருந்து" காண்கையில், யூதர்கள் நிச்சயமாகவே "பகைஞராக" இருந்தனர்.

கூடுதலாகப் பவுல், "உங்கள் [புறஜாதியார்]நிமித்தம்" என்று கூறினார் (வசனம் 28ஆ). இது, 11ம் அதிகாரத்தில் அடிக்கடி எடுத்துரைக்கப்பட்ட உண்மை யொன்றின் மறு உறுதிப்பாடாக உள்ளது: யூதர்கள் சுவிசேஷத்தைப் புறக்கணித்த விஷயமானது, புறஜாதியார் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு இரட்சிக்கப்பட வாய்ப்பளித்தது.

யூதர்கள் சுவிசேஷத்திற்குப் பகைஞராக இருந்தனர். எனவே அவர்கள் சுவிசேஷத்தைக் கொடுத்திருந்தவருக்கும் பகைஞராக இருந்தனர் என்ற உண்மையி லிருந்து ஒருவர் அடையக்கூடிய முடிவு என்னவாக இருக்கலாம்? 28ம் வசனத்தின் முதல்பாகம் பின்வருவது போன்று விரிவாக்கப்படலாம்: "சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் ... பகைஞராயிருக்கிறார்கள் [மற்றும் அவர்கள் தண்டனைக்கு மாத்திரமே பாத்திரராயிருக்கிறார்கள்]."

இயேசுவைக் கொலைசெய்தது மற்றும், சபை, சுவிசேஷம் மற்றும் கிறிஸ்தவர் களை அழிக்க முயற்சித்தது ஆகியவற்றில் யூதர்கள் என்ன செய்திருந்தனர் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவன் அவர்களைப் பூமியின் முகத்திலிருந்து ஏன் துடைத்துப் போட்டிருக்கவில்லை? அது நம்மை 28ம் வசனத்தின் நிறைவுப் பகுதிக்குக்

கொண்டு வருகிறது: “[தேவனுடைய] தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.” “தேவனுடைய தெரிந்துகொள்ளுதல்” என்பது தேவன் தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான மக்களினமாக இருக்கும்படி இஸ்ரவேலை தேர்ந்துகொண்டதைக் குறிக் கிறது. இஸ்ரவேலின் குடிகள் அன்புக்குரியவர்களாகவோ அல்லது எப்போதும் கர்த்தர்மீது அன்பைக் காண்பித்ததாலோ அந்த மக்களினம் “அன்புகூரப்பட்டதாக” இருந்ததா? இல்லை. மாறாக, இஸ்ரவேல் “பிதாக்களினிமித்தம் அன்புகூரப் பட்டதாக” இருந்தது. “பிதாக்கள்” என்பது முற்பிதாக்களை (காண்க NIV) - விசேஷமாக, “தேவனுக்குச் சிநேகிதனாக” இருந்த (யாக்கோபு 2:23; காண்க 2 நாளாகமம் 20:7; ஏசாயா 41:8) ஆபிரகாமை (காண்க ரோமர் 4) - குறிப்பதாக இருந்தது.

தேவன் ஆபிரகாமிடம் குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தியிருந்தார் மற்றும் அவர் தமது வார்த்தைகளிலிருந்து பின்வாங்கிப்போகாதிருந்தார் - “தேவனு டைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே” (ரோமர் 11:29; காண்க எண்ணாகமம் 23:19). “மாறாதவை” என்பது, அல்பா (*a*) (காண்க KJV) என்ற எழுத்தினால் எதிர்மறையாக்கப்பட்ட “மனந்திரும்புதல்” என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. “மனந் திரும்பு” என்பது அடிப்படையில் “மனதை மாற்றுதல்” என்றே அர்த்தப்படுகிறது. ஆபிரகாமின் சந்ததியார்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இல்லாததினால் மாத்திரம், தேவன் ஆபிரகாமுக்கு ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தங்களை நிறை வேற்றுதல் பற்றித் தமது மனதை மாற்றிக்கொள்ளவில்லை. நமது படிப்பில் முன்னதாகவே குறிப்பிட்டபடி, தேவன் யூதர்களுக்கு ஏற்படுத்தியிருந்த ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்றினார்.

28ம் வசனத்தின் முதல்பாகம் பின்வருமாறு விரித்துரைக்கப்படக் கூடும் என்று நான் கருத்துத் தெரிவித்தேன்: “சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் [யூதர்கள்] உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள் [மற்றும் தண்டனைக்கு மாத்திரமே பாத்திராயிருக்கின்றனர்].” 28ம் வசனத்தின் பிற்பகுதி, பின்வருவது போன்று விரித்துரைக்கப்படலாம்: “தெரிந்துகொள்ளுதலைக்குறித்து அவர்கள் [யூதர்கள்] பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள் [எனவே அவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு ஏற்றுக்கொள்ள இன்னொரு வாய்ப்பைத் தேவன் அவர்களுக்குக் கொடுக்கிறார்].” அவர்கள் இழிவானவற்றைச் செய்திருந் தாலும், தேவன் இன்னமும் யூதர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்றே விரும்பி னார்.

**தேவன் இரக்கம் காண்பிக்க விரும்புகிறார் (வசனங்கள் 30-32)**

இரட்சிப்பைப் பொறுத்தமட்டில் மூன்றாவதாக, தேவன் இரக்கம் காண்பிக்க விரும்புகிறார் என்று நாம் அறிய முடியும். “இரக்கம்” என்பது 9 முதல் 11 வரையிலான அதிகாரங்களில் ஒரு திறவுகோல் வார்த்தையாக உள்ளது (காண்க 9:15, 16, 18, 23). இவ்வார்த்தை 11:30-32ல் நான்கு முறைகள் காணப்படுகிறது. “இரக்கம்”(*eleos*) என்பது “கிருபை”(*charis*) என்பதுடன் நெருங்கிய தொடர்புடைய தாக உள்ளது, மற்றும் இவ்விரண்டையும் வித்தியாசப்படுத்துதல் கடினமான தாக உள்ளது. டேல் ஹார்ட்மேன் என்பவர், “கிருபை” என்பது தேவன் நமக்குத் தர நாம் பாத்திரராக இருப்பதை (தண்டனையை) *தரா*திருக்கிறார் என்றிருக்

கையில், "இரக்கம்" என்பது தேவன் நாம் பெறத்தகுதி*யாயிராத* விஷயத்தை (ஆசீர்வாதங்களை) தருகிறார் என்று கூறுவதில் பிரியமாயிருக்கிறார். யாரோ ஒருவர், "இரக்கம்" என்பது பரிதாபத்திற்குரியவர்களுக்கு உதவக் காரணமாகும் தேவனுடைய அன்பின் அம்சமாயிருக்கையில், "கிருபை" என்பது குற்றத்தை மன்னிக்க அவரை அசைக்கும் அவரது அன்பின் அம்சமாக உள்ளது" என்று எழுதினார்.[3] "*வெளிப்படுத்தப்பட்ட* கிருபை" என்பது "இரக்கம்" என்பதற்கான ஒரு எளிய விளக்கமாயிருக்கிறது. "இரக்கம்" என்பதை நீங்கள் எவ்விதம் விளக்கினாலும், நமது வேதபாட வசனப்பகுதியானது, தேவன் யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய "*எல்லார்மேலும்* இரக்கம்" காண்பிக்க விரும்புகிறார் (வசனம் 32; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று அறிவிக்கிறது - அது நம்மையும் உள்ளடக்குகிறது!

தேவன் எல்லார்மீதும் இரக்கம் காட்டுகிறார் என்பது பற்றிப் பேசுவதற்கு முன்னர் பவுல், (கடைசிமுறையாக) இப்போது நமக்குப் பழக்கமாகியுள்ள நிகழ்வு வரிசையைத் திரும்பக்கூறினார். (தேவனால்) யூதர்கள் தள்ளப்பட்டது (தேவனால்) புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பத்தை அளித்தது. இது புறஜாதிக்கிறிஸ்தவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை யூதர்கள் ஊக்கத்துடன் விரும்பத் தூண்டுவதை நோக்கங்கொண்டிருந்தது. இதனால் அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவார்கள், மற்றும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இந்த வரிசையை 30 மற்றும் 31 வசனங்களில் பவுல் எவ்வாறு சொற்றொடராக்கினார் என்பது இங்குள்ளது:

> ஆதலால், நீங்கள் [புறஜாதியார்] முற்காலத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய [யூதர்களுடைய] கீழ்ப்படியாமையினாலே[4] இரக்கம்பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் [யூதர்களும்] இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்கு [புறஜாதியாருக்கு]க் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்.

பவுலின் சிந்தனையினுடைய பிரதான வரியை இவ்விரு வசனங்களில் காண்பது எளிதாக உள்ளது:

யூதத்துவக் கீழ்ப்படியாமை
(தேவனால் யூதர்கள் தள்ளிவிடப்பட்டதை விளைவித்தது)

↓

புறஜாதியாருக்கு இரக்கம் காண்பிக்கப்படுதல்
(தேவனால் புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படுதல்)

↓

யூதர்களுக்கு இரக்கம் காண்பிக்கப்படுதல்
(தேவனால் யூதர்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல்)

பவுல் தமது கலந்துரையாடலின் இந்தப் பகுதியை, "எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப் போட்டார்" என்று கூறி முடித்துக்கொண்டார் (வசனம் 32). "அடைத்துப்

போடுதல்" என்பது கிரேக்க மொழியில் *sugkleio* என்ற (*kleio* ["அடைக்க"] என்பதற்கு முன்னதாக *sun* ["உடன், ஒன்றாக"]) என்னும் வார்த்தையுள்ள சொல்லாக இருக்கிறது. இவ்வசனத்தை மெக்கார்டு என்பவர், "God has imprisoned everyone in disobedience. ..." என்று மொழிபெயர்த்தார். இது தேவன் மேம் போக்காக நமக்குச் செய்யும் விஷயமாக இருப்பதில்லை; இது நமது சொந்தப் பாவம்நிறைந்த தன்மையின் விளைவாக உள்ளது. நமது பாவத்தினிமித்தமாக, நாம் யாவரும் பாவத்தினால் சிறைப்பட்டவர்கள் ஆனோம். "சூழ்நிலையானது நம்பிக்கையற்றதாக உள்ளது: பாவம் தொந்தரவு செய்கிறது, நியாயப்பிர மாணம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது, மனச்சாட்சி அச்சுறுத்துகிறது, கடைசி நியாயத்தீர்ப்பு பயமுறுத்துகிறது. ... [ஆனால் பின்பு,] திடீரென்று இருள் அகலு கிறது. தேவனே சிறைக்கதவைத் திறந்து [உள்ளே] வெளிச்சம் பிரகாசிக்க அனுமதிக்கிறார்."[5] நாம் எல்லாரும் கீழ்ப்படியாமை உள்ளவர்களாக இருந்திருக் கிறதால், தேவனுடைய கிருபை அல்லது இரக்கம் என்பது மாத்திரமே நம்மில் எவரும் இரட்சிக்கப்படக்கூடுவதற்கு அடிப்படையாக உள்ளது.

சிலர் 32ம் வசனத்தை, உலகளாவிய இரட்சிப்பு பற்றிப் போதிக்கப் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள், "ஒவ்வொருவரும் கீழ்ப்படியாமல் இருந்துள்ளோம் என்பது உண்மையே, ஆனால் இவ்வசனப்பகுதியானது, கடைசியில் தேவன் ஒவ்வொருவர் மீதும் இரக்கம் காண்பிப்பார் என்று போதிக்கிறது" என்று கூறுகின்றனர். இந்தத் தவறான போதனையைப் பற்றி, ஸ்டாட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> சிலர் இவ்வசனத்தின்மீது, தங்களின் உலகளாவிய கனவுகளைக் கட்டியெழுப்பி யுள்ளனர். மற்றும், ரோமருக்கு எழுதிய நிருபத்தில், இதன் சந்தர்ப்பப்பொருளி லிருந்து இதைத் தனிமைப்படுத்திய நிலையில், இது முடிவில் உலகளாவிய இரட்சிப்பை வாக்களிப்பதாகப் புரிந்துகொள்ளப்படக்கூடும். ஆனால் ரோம ருக்கு எழுதிய நிருபத்தில் "தேவகோபத்தின் நாள்" ஒன்றிருக்கிறது (2:5), அந்நாளிலே சிலர் "கோபாக்கினையையும் கோபத்தையும்," "இடர்ப்பாட் டையும் வருத்தத்தையும்" (2:8 முதல்) பெறுவார்கள் என்று பவுல் அறிவிப்ப தால், இந்த நிருபமானது இவ்விளக்கத்தை அனுமதிக்காது.[6]

நாம் எல்லாரும் கீழ்ப்படியாமையுள்ளவர்களாகவும் நித்திய அழிவுக்கு மாத்திரமே பாத்திரராகவும் இருந்தபோதிலும், இன்னமும் தேவன் நம்மீது இரக்கம் காண்பிக்க விரும்புகிறார் என்பதே 32ம் வசனத்தில் பவுலின் செய்தியாக உள்ளது. அவர் - யூதராயினும் அல்லது கிரேக்கராயினும், இளைஞராயினும் அல்லது முதிய வராயினும், ஆணாயினும் அல்லது பெண்ணாயினும், செல்வந்தராயினும் அல்லது ஏழையாயினும், கல்விகற்றவராயினும் அல்லது கல்விகல்லாதவராயினும், (உலகம் கருதுகிறபடி) "நல்லவராயினும்" அல்லது "மோசமானவராயினும்" - எல்லார்மீதும் இரக்கம் காண்பிக்கவே விரும்புகிறார். தேவன் நமக்கு - உங்களுக்கும் எனக்கும் இரக்கம் காண்பிக்கவே விரும்புகிறார். அதற்காகத் தேவனுக்கு நன்றி!

# தேவனைப் பற்றி நாம் அறியக்கூடியது என்ன (11:33-36)

இஸ்ரவேலை மீட்பதற்கான தேவனுடைய திட்டம் மற்றும் எல்லார்மீதும் இரக்கம் காண்பிக்க அவரது விருப்பம் ஆகியவற்றைப் பற்றிப் பவுல் சிந்திக்கையில், அவர் திடீரென துதிக்கத் தொடங்கினார். 9 முதல் 11 வரையிலான அதிகாரங்கள் "யூதத்துவப் பிரச்சனை"மீது கவனம் செலுத்துவதாக நாம் கூறியுள்ளோம்; ஒரு ஆழமான கருத்துணர்வில், இந்தப் பகுதியானது இஸ்ரவேலைப் பற்றியதாயிராமல், தேவனைப் பற்றியதாக உள்ளது.[7] இது, தேவன் நம்பிக்கைக்குரியவரா இல்லையா, தேவன் தமது வாக்குத்தத்தங்களைக் காத்துக்கொண்டுள்ளாரா இல்லையா (காண்க 9:6) என்பதைப் பற்றியதாக உள்ளது. தேவனுடைய உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திய பின்பு, பவுல் இந்தப் பகுதியை, தேவன் எவ்வளவு ஆச்சரியமானவராக இருக்கிறார் என்ற சொல்விளக்கத்துடன் முடித்தார். ரோமர் 11:33-36ம் வசனப்பகுதியானது 11ம் அதிகாரம், 9 முதல் 11 வரையிலான அதிகாரங்கள், மற்றும் இந்தக் கருத்தின்மீது பவுல் கூறவந்த யாவற்றிற்கும் பொருத்தமான உச்சக்காட்சியாக உள்ளது.

33 முதல் 36 வரையிலான வசனங்களை - பலமுறை - உரக்க வாசியுங்கள். இது ஆராய்ந்து பார்ப்பதைவிடச் சுவைத்துப் பார்ப்பதற்கு அதிகம் பாத்திரமான வசனப்பகுதியாக உள்ளது. இருந்தபோதிலும், பவுலின் சொற்றொடராக்கத்தை நெருக்கமாகக் கண்ணோக்குவதில் மதிப்புகள் சில இருக்கலாம். இந்த வசனப் பகுதியில் அப்போஸ்தலர், தேவனைப்பற்றிய பல கூற்றுக்களை ஏற்படுத்தினார்.

### தேவனைப் பற்றிய ஒவ்வொன்றையும் நாம் அறிய இயலாது (வசனங்கள் 33, 34)

11ம் அதிகாரத்தில், பவுல் தமது வாசகர்களுக்கு தேவனுடைய சிந்தை மற்றும் செயல்முறைகளுக்குள்ளான அரிதான ஒரு பார்வையைக் கொடுத்தார்: யூதத்துவக் கீழ்ப்படியாமையைத் தேவன் புறஜாதியாருக்கு இரட்சிக்கப்படுவதற்கான வாய்ப்பாக எப்படிப் பயன்படுத்தினார், மற்றும் பின்பு அவர் புறஜாதியாரின் கீழ்ப்படிதலை யூதத்துவக் கீழ்ப்படிதலைத் தூண்டுவதற்கு எவ்வாறு பயன்படுத்தினார் என்பது பற்றியவை. பவுல் தமது துதியை தேவனுடைய ஆச்சரியமான ஞானத்திற்காகத் துதித்தல் என்பதுடன் தொடங்கினார்: "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின்[8] ஆழம் எவ்வளவாயிருக்கிறது!" (வசனம் 33அ). சிலர் அறிவுள்ளவர்களாக இருக்கின்றனர், ஆனால் ஞானத்தில் குறைவுபடுகின்றனர்; மற்றவர்கள் ஞானமுள்ளவர்களாயிருக்கின்றனர், ஆனால் அறிவில் குறைவுபடுகின்றனர். தேவன் இவ்விரண்டையும் கொண்டுள்ளார்!

33ம் வசனத்தின் முதல் பாகத்தில், "ஆழம்" (*bathos*) என்பது திறவுகோல் வார்த்தையாக உள்ளது. தேவனுடைய ஞானமும் அறிவும், நாம் புரிந்துணரத் தொடங்க இயலாத அளவுக்கு மிகவும் "ஆழமாக" உள்ளன. பவுல் தொடர்ந்து, "அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!" என்று கூறினார் (வசனம் 33ஆ). JB வேதாகமத்தில் "... how impossible to penetrate his motives or understand his methods!" என்றுள்ளது. எனக்கு ஏசாயா 55:8, 9 வசனங்கள் நினைவுக்கு வருகின்றன: " 'என் நினைவுகள்

உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று' கர்த்தர் சொல்லுகிறார். 'பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவு களைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.' "

பவுல் தமது கூற்றை உயர்த்துவதற்குப் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற் கோள் காண்பித்தார், ஆனால் அவரது மேற்கோள் பல வசனங்களின் கூறுகளைக் கொண்டுள்ளது (காண்க யோபு 15:8; ஏசாயா 40:13; எரேமியா 23:18). அவர், "கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனா யிருந்தவன் யார்?" என்று கூறினார் (ரோமர் 11:34). "ஆலோசனைக்காரன்" என்பது *sumboulos* (from *boule* ["ஆலோசனை கூற, அறிவுரை கூற"] கூட்டல் *sun* ["ஒன்றாக, உடன்"]) என்ற வார்த்தையிலிருந்து வந்துள்ளது. மெக்கார்டு என்பவர் மொழிபெயர்த்த வேதாகமத்தில் "adviser" என்றுள்ளது. தேவன் யாரிடத்திலாவது எப்போதாவது ஆலோசனை கேட்டாரா? 34ம் வசனத்திலுள்ள இரு கேள்வி களுக்கும் "எவரிடத்திலும் இல்லை!" என்பதே பதிலாக உள்ளது.

செயல்விளைவில் பவுல், தேவனைப்பற்றிய ஒவ்வொன்றையும் நாம் அறிய இயலாது என்பதே தேவனைப் பற்றி நாம் அறியக்கூடிய முதல் உண்மையாக உள்ளது என்று கூறினார். ஒரு பாத்திரம் சமுத்திரத்திலுள்ள தண்ணீர் முழுவதையும் கொள்ள இயலாதது போலவே, எல்லைக்குட்பட்ட நமது மனங்கள், தேவனு டைய எல்லையற்ற ஞானத்தையும் அறிவையும் புரிந்துகொள்ள இயலாதவை களாக உள்ளன. இந்த சத்தியமானது, தேவன் படைத்த இந்த உலகத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்பவர்களை தாழ்மைப்படச் செய்ய வேண்டும். இந்தக் கருத்தானது, அவர் நமக்குக் கொடுத்த வசனத்தைப் புரிந்துகொள்ளக் கடின மாக முயற்சிப்பவர்களான நம்மையும் தாழ்மைப்படச் செய்ய வேண்டும். நாம் எவ்வளவுக்கு அதிகமாக அறிகிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக நாம் அறியாதிருக் கிறோம் என்பதை அறிகிறோம். யாரோ ஒருவர், "அறிவு என்ற தீவு வளர வளர, அறியாமை என்ற கடற்கரையும் வளருகிறது" என்று கூறினார்.

லியோன் மோரீஸ் என்பவர், பவுலின் துதியானது "நாம் தேவனைப் பற்றி *அறிந்துள்ளவற்றினாலல்ல* ... மாறாக அவரைப் பற்றி நாம் *அறியாதவற்றினா லேயே* தூண்டப்பட்டது" என்று கவனித்துள்ளார்.[9] பவுல் எல்லா பதில்களையும் கொண்டிருக்கவில்லை. அவரது "விளக்கங்கள்" பதில் அளித்துள்ள அதே அளவுக்குப் பல கேள்விகளை எழுப்பியுள்ளன. கடைசியில், சகல ஞானமும், சகல அறிவும், இரக்கமும் நிறைந்த தேவனை நம்பியிருத்தலே வாழ்வின் கேள்வி களுக்குத் திருப்தியளிக்கக்கூடிய "பதிலாக" உள்ளது.

**நாம் தேவனை நமக்குக் கடனாளியாக்க இயலாது (வசனம் 35)**

தேவனை நாம் ஒருபோதும் நமக்குக் கடனாளியாக்க இயலாது என்பதே நாம் தேவனைப் பற்றி அறியக்கூடிய இரண்டாவது உண்மையாக உள்ளது. 35ம் வசனத்தில் பவுல், யோபு 41:11ன் சாராம்சத்தைக் கொடுத்தார்: "தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?" மீண்டும், "எவரொருவரும் இல்லை" என்பதே புரிந்துகொள்ளப்படுகிற பதிலாக உள்ளது. நாம் கொண்டுள்ள ஒவ்வொன்றும் தேவனிடத்திலிருந்து வந்த தாகவும் இன்னமும் அவருக்கே உரியதாகவும் இருப்பதால், நாம் தேவ னுக்கு எதையும் கொடுக்க இயலாது; நாம் வெறும் உக்கிராணக்காரர்களாக

மாத்திரமே இருக்கிறோம். தாவீது அரசர், தேவாலயம் கட்டுதலில் பயன் படுத்தப் பலியொன்றைச் செலுத்தியபோது, அவர் தேவனிடத்தில், "இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்" என்று ஜெபித்தார் (1 நாளாகமம் 29:14; KJV).

உலகப்பிரகாரமான விஷயங்களில், நாம் தேவனை நமக்குக் கடனாளியாக்க இயலாதிருக்கையில், ஆவிக்குரிய விஷயங்களில் அது இருமடங்கு உண்மை யாக உள்ளது. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது, நமது இரட்சிப்புக்கு வலிவார்ந்த முக்கியத்துவமானதாக - இன்றியமையாததாகக்கூட - உள்ளது. நமது கீழ்ப்படிதலானது, தேவனை ஒருபோதும் நமக்கு எந்த விஷயத் திலும் கடனாளியாக்குவதில்லை என்பதை நாம் இன்னமும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் கிருபையாலே இரட்சிக்கப்பட்டால் ஒழிய, நாம் இரட்சிக்கப் படுவதே இல்லை.

**நமது தேவன் ஆச்சரியமானவர் (வசனம் 36)**

கடைசியாக, நமது தேவன் வார்த்தைகளுக்கு அப்பால் ஆச்சரியமா னவர் என்பதை நாம் அறிய முடியும். பவுல், "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது" என்று கூறினார் (வசனம் 36அ). இது உலகப்பிரகாரமான படைப்பைப் பொறுத்தமட்டில் உண்மையாகவுள்ளது. "For from him everything comes; through him everything exists; and in him everything ends" என்பது குட்ஸ்பீடு என்பவரின் சொற்றொடராக்கமாக உள்ளது. மோரீஸ் என்பவர், தேவன் "தொடங்குபவராக, நிலைநிறுத்துபவராக, மற்றும் முழுப்படைப்புக்கும் இலக்காக இருக்கிறார்" என்று எழுதினார்.[10] இருப்பினும், இந்தச் சொற்றொடர் உலகப்பிரகாரமானவைகளுடன் உறுதியிடப் படமுடியாது; சந்தர்ப்பப்பொருளானது ஆவிக்குரியவற்றைப் பற்றிப் பேசுகிறது. நமது மீட்பும்கூட, "அவரிடத்திலிருந்து, அவர் மூலமாக மற்றும் அவருக்கென்றே" உள்ளது. அவரே நமது இரட்சிப்பின் ஆதாரமூலமாக, பலமாக, மற்றும் குறிக் கோளாக இருக்கிறார்.

இவை எல்லாவற்றையும் சிந்தையில் கொண்டவராகப் பவுல், "*அவருக்கே* என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக" என்று முடித்தார் (வசனம் 36ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவனுக்குரிய மகிமையை நாம் ஒருக்காலும் எந்தத் தனிநபருக்கும் கொடுக்காதிருப்போ மாக. "கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்பு மானவர்; அவரே என் தேவன், ... அவரை உயர்த்துவேன்" (யாத்திராகமம் 15:2). "ஆமென்" (ரோமர் 11:36இ)!

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் கடினமான பகுதி (9 முதல் 11 வரையிலான அதிகாரங்கள்) இவ்வாறு நிறைவடைகிறது. கலந்துரையாடப்பட்ட திணறச்செய்யும் எல்லாக் கேள்விகளுக்கும் பவுல் எளிய பதில்களை அளிக்க வில்லை, ஆனால் அவர் அந்தக் கேள்விகள் முக்கியமற்றவையாக இருந்தன என்றும் குறிப்பிடவில்லை. அதற்குப் பதிலாக, அவர் நமக்குச் சில உட்கண்ணோட் டங்களைக் கொடுத்துப் பின்பு செயல்விளைவில், "*தேவன்* பதில்களைக் கொண் டுள்ளார். *அவர்மீது* நம்பிக்கை வையுங்கள்" என்று கூறினார். இந்தப் பகுதி

*யானது தைரியத்துடனான ஒரு குறிப்புடன் முடிவடைகிறது.*

## முடிவுரை

*இந்த எடுத்துரைப்பின் மீது நான் பணியாற்றிக்கொண்டிருக்கையில், எனக்கு உபாகமம் 29:29 நினைவுக்கு வந்தது: "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்." நாம் அறிய இயலாத விஷயங்கள் பல உள்ளன: "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்." இருப்பினும், தேவன் நமக்கு வெளிப்படுத்தச் சில சத்தியங்கள் பொருத்தமானவையாக இருப்பதாகக் கண்டுள்ளார். நமது பாடத்தில், நாம் "வெளிப்படுத்தப்பட்ட" அந்த விஷயங்களில் சிலவற்றைக் கண்டுள்ளோம்:*

- *யூதர்களையும் புறஜாதியாரையும் இரட்சிக்கத் தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளார்.*
- *எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.*
- *எல்லாருக்கும் இரக்கம் காண்பிக்கத் தேவன் விரும்புகிறார்.*
- *நாம் ஒருக்காலும் தேவனை நமக்குக் கடனாளியாக்க இயலாது; நாம் அவரது கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றைச் சார்ந்திருக்க வேண்டும்.*
- *நமது தேவன் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஆச்சரியமானவராக இருக்கிறார்.*

*இன்றைக்கான சத்தியம்* பத்திரிகையில் பல பக்கங்களை நான் நிரப்பக்கூடும் என்பதற்காக இந்த சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.[11] மாறாக, கிறிஸ்துவின் புது உடன்படிக்கையின் "எல்லா வசனங்களையும் கடைப்பிடிக்க" நாம் தூண்டப்படுவோம் என்பதற்காக இவைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களிடத்தில் நீங்கள் - இரட்சிப்புப் பற்றிய இயேசுவின் வார்த்தைகள் உட்பட (யோவான் 3:16; லூக்கா 13:3; மத்தேயு 10:32; மாற்கு 16:16) - இயேசுவின் "எல்லா வசனங்களையும் கடைப்பிடிப்பதில்" அடங்கியுள்ளது என்ன என்று கூற விரும்பலாம்.*

*"எப்போதுமே நம்பிக்கை உண்டு!" என்பது இந்தப் பாடத்திற்கான சாத்தியமுள்ள இன்னொரு தலைப்பாக உள்ளது. இரு கருத்துக்கள் ஏற்படுத்தப்பட முடியும்: (1) தேவன் உங்களை இரட்சிக்க விரும்புவதால் நம்பிக்கை உள்ளது (வசனங்கள் 25-32), மற்றும் (2) தேவன் தேவனாக இருப்பதால் நம்பிக்கை உள்ளது (வசனங்கள் 33-36).*

*பவுலின் உன்னதமான துதியினுடைய விரிவாக்கப் பிரசங்கம் ஒன்றை நீங்கள் செய்ய முடியும் (வசனங்கள் 33-36). "நான் பிரம்மித்துப் பேரன்பினால்" என்ற பாடல் இத்துடன் பயன்படுத்தப் பொருத்தமானதாக இருக்கும். நீங்கள் "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது" (வசனம் 36அ) என்ற வார்த்தைகளின்மீது ஒரு வசனரீதியான பிரசங்கத்தைக்கூட எடுத்துரைக்க முடியும்.*

---

*குறிப்புகள்*

[1]John R. W. Stott, *The Letters of John: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 304 (emphasis mine). [2]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 385. [3]Ronald F. Youngblood, ed., *Nelson's New Illustrated Bible Dictionary* (Nashville: Nelson, 1995, 1986), 822. [4]*30 மற்றும் 31 ஆகிய வசனங்களில்* KJV வேதாகமம் "believed" *மற்றும்* "unbelief" *என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது, ஆனால் கிரேக்க வசனத்தில் "கீழ்ப்படியாமை" என்பதற்கான வார்த்தைதான் உள்ளது. முன்னதாக ரோமர் 11ல் பவுல், அவிசுவாசத்தின் நிமித்தம் யூதர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர் என்று வலியுறுத்தியிருந்தார் (வசனம் 20ஐக் கவனிக்கவும்). இங்கு, இந்த அப்போஸ்தலர், கீழ்ப்படியாமையின் நிமித்தம் அவ்வாறு இருந்தது என்று கூறினார். மீண்டுமாகப் பவுல் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் என்பவற்றின் கருத்துக்களை ஒன்றுக்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தினார்.* [5]William Hendriksen, *Exposition of Paul's Epistle to the Romans,* New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 385. [6]Stott, 307. [7]Moo, 291. [8]*"ஞானம்" மற்றும் "அறிவு" என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு பற்றிப் பல வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. "அறிவு" என்பது உண்மைகளை அறிதல் என்பதாக இருக்கையில் "ஞானம்" என்பது "பொதுவான கருத்துணர்வாக" உள்ளது என்பது இதைப்பற்றி நினைப்பதற்கான ஒரு எளிய வழியாக உள்ளது.* [9]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 427. (Emphasis mine.) [10]Ibid., 429.

[11]*ஒரு வகுப்பிலோ அல்லது ஒரு ஆராதனை ஊழியத்திலோ, நான் "எனது பாடத்தைக் குறிப்பிட்ட அளவு நிமிடங்களால் நிரப்பும்படிக்குச் சில விஷயங்களைப் பெற்றிருக்கும் என்பதற்காக" என்று கூறுவது உண்டு.*